Most. Rev. Dr. YVON AMBROISE, D.D., Ph.D.
Bishop of Tuticorin
Manager, R.C. Schools
Tuticorin Diocese

Catholic Bishop's House
TUTICORIN - 628 001.
Tamilnadu.
Tele: 0461 - (Off) 2320035
(Per) 2320036

Ref. No: 2014 /108

01-04-2014

பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

பெறுநர்:

முதன்மைக்கல்வி அலுவலர் அவர்கள்
திருநெல்வேலி - 627009.

ஐயா,

பொருள்: உதவி பெறும் சிறுபான்மைப்பள்ளி - மேல்நிலை - திசையன்விளை, ஹோலி ரெடீமர் மேல்நிலைப்பள்ளி, புதிய முதுகலை ஆசிரியை செல்வி. மைக்கிள் ஜோஸ்பின் (ஆங்கிலம்) நியமனம் - திரு. ஜி. அந்தோணி நிக்சன் ஆசிரியரின் முறையீடு சார்பு.

பார்வை: 1. ஆசிரியரின் 05-02-2014 நாளிட்ட விண்ணப்பம்.
2. W.P. (MD) 3230 / 2014 தீர்ப்பு 25-02-2014.

* * * * * * *

தூத்துக்குடி கத்தோலிக்க மறைமாவட்ட சிறுபான்மை கூட்டு மேலாண்மை நிர்வாகத்திற்குட்பட்ட திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, ஹோலி ரெடீமர் மேல்நிலைப்பள்ளியில் முதுகலை ஆசிரியையாக பணிசெய்து வந்த திருமதி. எஸ்தர் என்பார் காலமானதால் மேற்படி பணியிடம் 10-11-2013 முதல் காலியானது. இக்காலிப் பணியிடத்தில் முழுக்கல்வித்தகுதி பெற்ற செல்வி. மைக்கிள் ஜோஸ்பின் என்பார் 05-02-2014 முதல் நியமிக்கப்பட்டு தொடர்ந்து பணி செய்து வருகிறார்.

இவரது நேரடி நியமனத்தை எதிர்த்து இப்பள்ளியைச் சார்ந்த அறிவியல் பாட இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர் திரு. அந்தோணி நிக்சன் என்பார் பதவி உயர்வு வேண்டி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் 3230/ 2014-ஐ தொடர்ந்து 25.02.2014-ல் தீர்ப்பு பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பில் முதல் பிரதிவாதியான தாங்கள் அன்னாரின் 05-02-2014 நாளிட்ட முறையீட்டின் மீது உரிய ஆணையை பிறப்பித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்களது பள்ளி, தூத்துக்குடி கத்தோலிக்க மறைமாவட்ட கூட்டு மேலாண்மை நிர்வாகத்திற்குட்பட்ட சிறுபான்மைப் பள்ளியாகும். சென்னை உயர்நீதிமன்றம் எங்களது நிர்வாகத்தின் சிறுபான்மை தகுதியை W.P. 570/1975-ல் உறுதிப்படுத்தி 24.09.1976-ல் தீர்ப்பு வழங்கி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.